[1982 மார்ச் 25

தனியார்களால் நடத்தப்பெறும் வாரம் மற்றும் தினசரி சந்தைகள்.

* வினா எண். 653.—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழகத்தில் தனியார்கள் நடத்திவரும் வாரச்சந்தை, தினசரி சந்தைகள் எவ்வளவு ?

(ஆ) இதை உள்ளாட்சித்துறையே ஏலத்தில் விடுவதற்கான செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிப் பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டு வரும் வாரச் சந்தைகள் 12, தினசரி சந்தைகள் 43. பேரூராட்சிப் பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டுவரும் வாரச் சந்தைகள் 28, தினசரி சந்தைகள் 14. ஊராட்சி பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டு வரும் வாரச் சந்தைகள் 107. மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனியார் நடத்திவரும் வார மற்றும் தினசரி சந்தைகள் எதுவுமில்லை.

(ஆ) தனியார்களால் நடத்தப்பெறும் தினசரி மற்றும் வாரச் சந்தைகளுக்கு உள்ளாட்சி நிறுவனங்களால் உரிமைக் கட்டணம் பெற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அவைகள் உள்ளாட்சிகளுக்கு சொந்தமானதாகாது. இருப்பினும் இவற்றை உள்ளாட்சி நிறுவனங்களே ஏற்று நடத்த வகை செய்யும் வகையில் தகுந்த சட்டத் திருத்தங்கள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சேலம். மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சியில் நடைபெறக்கூடிய தனியார் நடத்தும் வார மற்றும் தினசரி சந்தைகளுக்கு, வசூலிக்கப்படும் லைசென்ஸ் கட்டணம் எவ்வளவு ? எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அந்த தொகையை தற்போதைய நிலவரத்திற்கேற்ப திருத்தி அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ? அதே நேரத்தில் நகராட்சி நடத்தக்கூடிய தினசரி மற்றும் வாரச் சந்தைகளை பாதிக்கக்கூடிய அளவிற்கு வருவாயை, அந்தத் தனியார்கள் போட்டியாக வருவதை அரசு உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலிலே, இருக்கக்கூடிய தனியார் வாரச் சந்தைகள், தினசரி சந்தைகள், எல்லாவற்றையுமே, உள்ளாட்சி

1982 மார்ச் 25]

மன்றங்களே ஏற்று நடத்துவது என்கின்ற முடிவினை மேற்கொண்டு இதிருக்கிறோம். அதற்குரிய சட்டத்திருத்தம், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவர இருக்கிறோம். ஆகவே, அந்தச் சந்தைகளை எடுப்பதன் மூலமாக உள்ளாட்சி மன்றங்களுக்கான வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ சுமார் 10 கோடி ரூபாய் அதன் மூலமாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. தங்கராசு: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ளாட்சி துறையின் எல்லையில் வாரச்சந்தைகள் 107 என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருவாயை அதிகரிக்கின்ற வகையில் தனியார் நடத்தும் வார சந்தையை உடனடியாக 'லாண்ட் அக்குசிஷன்' செய்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களே வாரச் சந்தை நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சட்டத் திருத்தம் இந்தத் தொடர் கூட்டத்திலேயே கொண்டு வரப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது தனியார் நடத்தும் வாரச்சந்தை, தினசரி சந்தைகள் ஒழிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த மாநிலத்தில் பல் வேறு இடங்களில் ஆண்டுக்கு ஒருமுறை தனிப்பட்டவர்கள் மாட்டுச் சந்தை நடத்தி ஏராளமாக இலாபம் பெறுகிறார்கள். அந்த மாட்டுச் சந்தைகளையும் ஏற்று நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சந்தைகள் நாம் பிறப்பிக்கின்ற சட்டத்தின் கட்டுக்குள் அடங்காவிட்டால் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலையில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு.

*வினா எண். 654—திரு. எஸ். டி. உகம் சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சென்னை நகரம், நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ் ரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களால் 1959-ஆம் ஆண்டு திறக்கப்பட்ட குடிநீர்த் தொட்டியை மறைக்கின்ற அளவில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?